# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.1564/2025 |
| Miscellaneous | : | . |
| Preliminary Register | : | . |
| Deposition of Witness for | : | . |
| Prosecution | : | . |
| Defence | : | அ.சா.2 |
| Name | : | .சுரேஷ் |
| Father’s Name | : | .பெரியசாமி |
| Village | : | .சலுக்கை கிராமம் |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | .40 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 12.11.2025.

**எதிரிகள் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் 20.08.2024ம் தேதி 13.50 மணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள கைபற்றதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.3 ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் 20.08.2024ம் தேதி 13.40 மணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள கைபற்றுதல் மசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து அ.சா.ஆ.4 ஆகும். அந்த கையெழுத்துகளை போலிசார் போடச்சொன்னதால் போட்டேன். வேறு விவரம் தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அனுமதி கோரப்பட்டு அனுமதியுடன் குறுக்கு விசாரணை.**

**சாட்சியை வந்தவாசி வடக்கு காவல் நிலைய காவலர் துரை அடையாளம் காட்டி ஆஜர்படுத்தினார். சாட்சியின் ஆதார அடையாள அட்டை சரிபார்க்கப்பட்டது.**

கடந்த 20.08.2024ம் தேதி 13.40 மணிக்கு சலுக்கை கிராமம் ரங்கநாதன் டவுன்சிப் காலணி வீட்டுமனை அருகில் 1ம ் எதிரி கார்த்திக்கிடமிருந்து போலிசார் கைபற்றிய மதுபானத்திற்கும் 20.08.2024 பகல் 13.50 மணிக்கு அதே இடத்தில் 2ம் எதிரி சுரேஷ் என்பவரிடம் கைபற்றப்பட்ட இருசக்கர வாகனம் மற்றும் ரூ850/-க்கும் நான் சாட்சியாக இருந்து சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. வழக்கில் இருந்து எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.